**திஹகொட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து திஹகொட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிர்மான வேலைக் கடன்பட்டோர் ரூபா 7,856,437 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மான வேலை கடன்கொடுத்தோருக்காக ரூபா 8,236,866 தொகை குறைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது சபை வளவில் கராஜ் ஒன்று நிர்மானிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 501,090 இற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த பெறுமதியினை மூலதனப்படுத்துவேன். |
| (iv) | மீளாய்வாண்டின் போது போசனை இல்லத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 124,174 தொகை பெறுமதியான உபகரண இருப்பினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த பெறுமதியினை மூலதனப்படுத்துவேன். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 153,159 தொகை பெறுமதியான நூலகப் புத்தகங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த பெறுமதியினை மூலதனப்படுத்துவேன். |
| (vi) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | மீளாய்வாண்டின் போது சபைக்கு உதவியாக கிடைத்திருந்த ரூபா 191,242 தொகை பெறுமதியான ஆய்வுர்வேத மருந்து இருப்பினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத் தொகை ரூபா 154,331,529 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 1,530,952 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளில் வித்தி யாசங்கள் இணக்கஞ் செய்து கணக் குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 இறுதிக் கணக்கு களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை யால் கூட்டுத்தொகை ரூபா 154,520,863 தொகைக்கான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 இறுதிக் கணக்கு கள் தயாரிக்கும் போது விரிவான அட்டவணைகளுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| i. விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்ட பிழைகளை சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| ii. விதி 204 | 2018 ஆம் ஆண்டு பண்டக் கணிப்பீட்டிற்கு உரிய மிகை மற்றும் குறைபாடுகள் தொடர்பாக பரிந்துரைகளை செயற்படுத்தியிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்ட பிழைகளை சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | காலங் கடந்த திருப்பி செலுத்த வேண்டிய ரூபா 2,368,489 இற்கான வைப்புக்கள் வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலக்கம் 30/2016 மற்றும் 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்ட பிழைகளை சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,198,354 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,791,829 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **2019** | | | | **2018** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,347,500 | 738,024 | 799,906 | 210,483 | 3,180,500 | 569,715 | 544,915 | 272,365 |
| வாடகை | 3,105,000 | 2,729,680 | 2,760,481 | 205,453 | 2,710,000 | 3,023,800 | 3,024,050 | 236,254 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,155,900 | 1,119,327 | 1,124,837 | - | 815,800 | 882,251 | 901,671 | 5,510 |
| ஏனைய வருமானங்கள் | 26,687,000 | 19,200,826 | 4,710,189 | 31,729,057 | 17,264,750 | 12,541,886 | 13,910,800 | 17,238,420 |
| மொத்தம் | 33,295,400 | 23,787,857 | 9,395,413 | 32,144,993 | 23,971,050 | 17,017,652 | 18,381,436 | 17,752,549 |

**2.2.2 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 223,254 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,067,350 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,290,604 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,098,152 தொகையாக இருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 192,452 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை கடை வாடகை இதுவரை தவணை அடிப்படையில் அறவிடப்பபட்டதுடன், அவற்றிற்கான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. |

**2.2.3 நீர்க் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை மீதி ரூபா 258,010 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 337,462 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 595,472 தொகை அறவிடப்பட வேண்டியி ருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 399,642 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 195,830 தொகை நிலுவை ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நடமாடும் அறவீடு செய்யும் நடைமுறை ஒன்றின் மூலம் நிலுவையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.4 ஏனைய வருமானங்கள்**

**நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதி யில் உள்ளவாறு ரூபா 983,001 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 30,666,828 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அனுப்புமாறு மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் எழுத்துமூலம் விண்ணப்பித்துள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற் கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் குறிக்கோள் நெருங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்கள் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகாலத் திட்டம் ஒன்று தற்போது சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலக்கம் 1824 மற்றும் 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய வர்த்தமானி மூலம் திஹகொட பிரதேசிய சபையின் அதிகாரப் பிரதேசம் முன்னேற்றப்பட்ட பிரசேதம் ஒன்று என வெளியிடப்பட்டு இலக்கம் 2009 மற்றும் 2017 மார்ச் 03 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் 4.12 சதுர கிலோமீற்றர்கள் வீதவரி அறவிடப்பட வேண்டிய பிரதேசம் என அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பிரதேசத்தின் அனைத்து ஆதனங்களையும் பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனைத்து ஆதனங்களும் பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். | பெறுமதி மதிப்பீட்டு அலுவல்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i. அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 04 மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவி களை முறைப் படுத்துவதற்கு மற்றும் வெற்றிடங்களை நிரப்பப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| ii. சபையின் 03 வெளிக்கள வேலைத் தொழிலாளர்கள் மற்றும் 04 சுகாதாரத் தொழிலாளர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய கடமைகளுக்கு புறம்பான கடமைகள் சாட்டப்பட்டிருந்தது. | உரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். | சபைத் தீர்மானம் மற்றும் சேவைகளின் தேவை மீது நிறுவனத் தலைவரினால் கடமைகள் சாட்டப்பட்டிருந்தன. |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத 12 நிறுவனங்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காததுடன், கட்டணமாக ரூபா 52,800 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறுவனங்கள் தொடர்பாக வெளிக்கள பரிசோதனை ஒன்று மேற்கொள்வதற்கும், அதன் மீது நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலக்கம் 2103 மற்றும் 2018 திசெம்பர் 21 ஆம் திகதிய வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தல் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் 2020 ஜனவரி 28 திகதி அளவில் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 84 அறிவித்தல் பலகைகள் இருந்து ரூபா 488,025 இற்கான கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது குறிப்பிட்ட கட்டணங்களை அறவீடு செய்வேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 05 ஏக்கர் 03 ரூட் 32.36 பர்சஸ் அளவான 21 காணிகளை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலகத்துடன் இணைந்து உரிய நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 சொத்துக்களின் மூலம் பெறவேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 01 ஏக்கர் 01 ரூட் 11.34 பர்சஸ் அளவான 04 காணிகளிலிருந்து வாடகை வருமானம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுத் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த குரு கெப் வண்டி மற்றும் டிரக்டர் வண்டி என்பவற்றை திருத்துவற்கு நடவடிக்கை எடுக்காமல் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது. | திருத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.6 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ரூபா 2,347,598 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.7 ஒப்பந்த நிருவாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தென் மாகாண பிரதான செயலாளரின் இலக்கம் 03/2014 மற்றும் 2014 ஒக்தோபர் 15 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பாதை வேலைகளுக்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த அலகு கூறுவிலை பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், பாதைகளை அபிவிருத்தி செய்த போது மாகாண கட்டட பணிப்பாளரின் கூறுவிலைகள் பயன்படுத்தியிருந்தமையால் 29 நிர்மான வேலைகளுக்காக ரூபா 169,058 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த அனைத்து நிர்மான வேலைகளினதும் பிடிபணம் கொடுப்பனவு செய்யப்படும் போது மிகையாக செலுத்தியிருந்த தொகையை கழித்து மீதித் தொகையை மாத்திரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |